# நிதி ஆணைக்குழுவின் செயலாற்றுகை

**(2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01ஆம் திகதி முதல் டிசம்பர் 31 ஆம் திகதி வரை)**

2017 ஆம் ஆண்டுக்கான நிதி ஆணைக்குழுவினது இச் செயலாற்றுகை அறிக்கையானது நிதி ஆணைக்குழுவினது பிரதான செயற்பாடுகள் மற்றும் நிதியீட்டத்தகவல்கள் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது.

**01. 2018 ஆம் ஆண்டுக்கான பரிந்துரைகள்**

13ஆவது திருத்தச் சட்டமூலத்தின் 154 (ண) உறுப்புரைக்கு அமைவாக நிதி ஆணைக்குழுவினது செயற்பாடுகள் மற்றும் பொறுப்புக்களுக்கு ஏற்ப மாகாணங்களுக்கான மூலதன மீண்டெழும் செலவின பகிர்வுகளுக் கான பரிந்துரைகள் மாண்புமிகு ஜனாதிபதி அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டு மாகாணங்களுக்கான மூலதன மீண்டெழும் செலவின பகிர்வுகளுக்கான பரிந்துரைகள் மூன்று மொழிகளிலும் தயாரிக்கப்பட்டு 06.11.2017 இல் பாராளுமன்றிற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

**02. வருடாந்த அபிவிருத்தித்திட்டங்களுக்கான அனுமதி வழங்கலும் மாகாணங்களுக்கான விஜயமும்**

2017 இல் நிதி ஆணைக்குழுவினது தலைவர் செயலாளர் மற்றும் அதிகாரிகள் மாகாணங்களுக்கான விஜயத்தினை மேற்கொண்டு மாகாணங்களினால் நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தித்திட்டங்களை மீளாய்வு செய்தனர்.மாகாணங்களது பிரதம செயலாளர் பொறுப்பான அமைச்சின் செயலாளர்கள் மற்றும் திணைக்களத்தலைவர்கள் இக்கூட்டத்தில் பங்குபற்றினார்கள்.

2017ஆம் ஆண்டுக்கான வருடாந்த அபிவிருத்தித்திட்டங்களுக்கான அனுமதி நிதி ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ளது.மாகாணங்களினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தித்திட்டஙகளில் திருத்தம் மேற்கொள்ள முடியும்.

**03. 2018 ஆம் ஆண்டுக்கான மூலதன மீண்டெழும் செலவினத்தேவைப்பாட்டு பாதீட்டு வழிகாட்டி**

நிதி ஆணைக்குழுவினால் எதிர் வரும் ஆண்டுக்கான மாகாண வருடாந்த அபிவிருத்தித்திட்டங்கள் தயாரிப்பதற்கான மூலதன மீண்டெழும் செலவின தேவைப்பாட்டு மதிப்பீட்டு பாதீட்டு வழிகாட்டி மற்றும் 2018 ஆம் ஆண்டுக்கான மாகாணங்களின் தேவை மதிப்பீட்டு வழிகாட்டி என்பன மாகாணங்களுக்கு அனுப்பப்பட்டு அவர்களின் பதில் பெறப்பட்டது.

## 04. அபிவிருத்தித் திட்டமிடலுக்கான பொது திட்டமிடல் அறிமுகமும் நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தி இலக்கும்

நிதி ஆணைக்குழுவினது முக்கிய பணிகளில் ஒன்றான மாகாணங்களுக்கான நிதிவளங்கலில் மூலதன ஒதுக்கீட்டில் கீழ் வருகின்ற மாகாண குறித்தொதுக்கப்பட்டஅபிவிருத்திக் கொடையினது (PSDG) அபிவிருத்தித்திட்டங்களுக்கான மாகாண வழிகாட்டியினை வழங்குவதுடன் வரையறுக்கப்பட்டட மாகாண வளங்களை அதிக பட்சமாகப் பயன்படுத்துவதை உறுதி செய்வதாகும்.

2017 இல் நிதி ஆணைக்குழு புதிய படிவத்தினை அறிமுகப்படுத்தியது இது ஒவ்வொரு துறைக்குமான கூறுகள் உப கூறுகள் அடங்கலாக நிலைபேறான அபிவிருத்தி இலக்கு கூறுகளுடன் ஒத்ததாக அமைந்தது. ஒன்பது மாகாணங்களுக்கும் பொதுவானவை நிலைபேறான அபிவிருத்தி இலக்கில் குறிப்பிடப்படும் குறிகாட்டிகளுடன் இக் கூறுகள் மற்றும் உப கூறுகள் தொடர்பு படுத்தப்படல் வேண்டும். பொதுவான கூறுகள் மற்றும் உப கூறுகள் என்பவற்றிற்கு மேலதிகமாக மாகாணங்கள் பரந்த செயற்பாட்டு பகுதிகளை இனங்கண்டு அவற்றில் முதலீடு செய்யும் நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தவும் தயாராக உள்ளன.

## 05. மாகாண வருடாந்த அபிவிருத்தித்திட்டங்களின் திருத்தங்கள் - 2017

மாகாணங்களின் கோரிக்கைகயின் அடிப்படையில் 2017 ஆம் ஆண்டுக்கான மாகாண வருடாந்த அபிவிருத்தித்திட்டங்களின் துறைரீதியான முன்னுரிமைப்படுத்தப்படவேண்டிய விடயப் பரப்பின் கீழ் வரும் பரந்த செயற்பாட்டுப் பகுதியில் திருத்தங்கள் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

## 06. நிதி ஆணைக்குழுவினது வருடாந்த அறிக்கை - 2016

நிதி ஆணைக்குழுவினது 2016ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை மும் மொழிகளிலும் தயாரிக்கப்பட்டு மாண்புமிகு ஜனாதிபதி அவர்களுக்கு 05.12.2017 இல் சமர்ப்பிக்கப்பட்டது. பாராளுமன்றில் வருடாந்த அறிக்கையை சமர்ப்பிக்க அமைச்சரவை எண்ணியுள்ளது.

## 07. மூலோபாயத்திட்ட மீளாய்வும்/ அமுலாக்கலும்

நிதி ஆணைக்குழுவினது பங்கேற்பு அணுகுமுறையுடன் தயாரிக்கப்பட்ட மூலோபாயத்திட்டம் நிறைவு செய்யப்பட்டு ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்டது. ஆணைக்குழுவினால் அனுமதி வழங்கப்பட்டது.

## 08. மாகாணங்களுக்கான கணக்கு அறிக்கை தயாரித்தல்

கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது திணைக்களத்தால் முன்வைக்கப்பட்ட மாகாணங்களது கணக்காய்வு அறிக்கை ஆராயப்பட்டு நிதி ஆணைக்குழுவினது அவதானங்கள் மாகாணங்களினது பிரதம செயலாளர்களுக்கு அனுப்பப்பட்டது.

இத்தகைய நிதி ஆணைக்குழுவினது அவதானங்கள் பொறுப்புக் கூறலையும் வெளிப்படைத்தன்மையினையும் மேலும் மேம்படுத்தும் அத்துடன் மாகாணங்களது கணக்காய்வு அறிக்கையினைக் குறைக்கும்.

### 09. நிதி ஆணைக்குழுவிற்கான புதிய அலுவலகக் கட்டட கட்டுமானம்

நிதி ஆணைக்குழுவினது புதிய அலுவலக கட்டடகட்டுமானம் முன்னேற்றகரமாக உள்ளது. பன்னிரெண்டு முன்னேற்ற மீளாய்வுக்கூட்டங்கள் நிதி ஆணைக்குழுவிலும் மாதாந்த தொழில்நுட்ப கூட்டங்கள் திட்ட ஆலோசனைப்பிரிவு (மொரட்டுவ பல்கலைக்களக கட்டட நிர்மாண பீடம்) மற்றும் ஒப்பந்தகாரர் பங்களிப்புடனும் இடம் பெற்றது. அனுமதிக்கப்பட்டரூபா 300 மில்லியனில் டிசம்பர் மாதம் 31ஆம் திகதி வரையான செலவினம் ரூபா 134 மில்லியன். திட்டமிடப்பட்டதனை விட 109 நாட்கள் பின்னடைவாக உள்ளமை கவனத்தில் கொள்ளப்பட்டு 2018 பெப்ரவரி 28 இல் கட்டட நிர்மாண திட்டத்தினை முடிவுறுத்த வேண்டுமென ஒப்பந்தகாரர் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இவ்வாறான நீண்ட பின்னடைவின் காரணமாக நிதி ஆணைக்குழுவானது நிபுணர்களிடம் 2018 ஆம் ஆண்டு ஜனவரி முதல் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களின் எண்ணிக்கையினை அதிகரிக்கும்படி கோரியுள்ளது.

### 10. நிதி ஆணைக்குழுவின் தரவுத்தளம் MIS

நிதி ஆணைக்குழுவினது தரவுத்தளம் நிதி ஆணைக்குழுவின் செயற்பாடு மற்றும் நிறைவேற்றலுக்கு மிகவும் முக்கியம் வாய்ந்ததாகும். 2017 ஏப்ரல் ஆணைக்குழு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மை (ICTA) உடன் பேச்சு நடாத்தியது பல தொடர் கூட்டங்கள் நிதி ஆணைக்குழு மற்றும் ICTA உடன் இடம்பெற்றது. ICTA உடன் கலந்துரையாடலை நடாத்துவதன் மூலம் அர்த்தமுள்ள முடிவுகளை அடைய முடியும் எனினும் பொருத்தமான பெறுபேற்றினை அடையமுடியாததனால் நிதி ஆணைக்குழு இந்த விடயத்தில் விரைந்து செயற்படாவிடின் ஆசியாபவுன்டேசன் நிதியினை மீளப்பெறும் என்பதனால் கொழும்பு பல்கலைக்கழக கணனிப் பாடசாலையுடன் நிதி ஆணைக்குழு தரவுத்தள (MIS) உருவாக்கலுக்கான ஆரம்ப கலந்துரையாடலை மேற்கொண்டது. ICTA தொடர்ந்து தரவுத்தளம் (MIS) உருவாக்கலுக்கான தனது ஆதரவினையும் வழிகாட்டல்களையும் வழங்கும்

### 11. நிதி ஆணைக்குழுவினது சட்டவரைபு

நிதி ஆணைக்குழுவின் சட்டவரைபு உருவாக்கப்பட்டு மாண்புமிகு ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டது. ஜனாதிபதி செயலகம் ஆணைக்குழுவின் சட்டவரைபு பற்றிய சில அவதானங்களை அனுப்பியது இதற்கு நிதி ஆணைக்குழு பதிலளித்தது 15.12.2017 இல் அமைச்சரவை அங்கிகாரம் பெறுவதற்காக நிதி ஆணைக்குழுவின் சட்டவரைபு முன்வைக்கப்பட்டது.

## 12. கல்வி சுற்றுலா

நிதி ஆணைக்குழுவின் செயலாளர் ஏனைய தொடர்புடைய அலுவலர்கள் தெகிவளை மவுன்லவனியா மாநகரசபை மற்றும் கெஸ்பாவ நகர சபைக்கு விஜயம் செய்தனர். இந்த விஜயத்தின் நோக்கம் சபைகளினது கட்டமைப்பு, அதனது கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் மற்றும் வருமான செலவினங்களின் வகை, வருமான சேகரிப்பு, அபிவிருத்தித்திட்டங்கள், நூலக முகாமைத்துவம், உட்கட்டுமான பராமரிப்பு, கழிவு முகாமைத்துவம், முன்பள்ளி கல்வி, சமூக நலநோன்பு, நடவடிக்கைகள் மற்றும் சேமிப்பும் மூலதனமும் மற்றும் ஆளணி முகாமைத்துவம் பற்றி அறிவதாகும்.

## 13. அலுவலர்களது இயலளவு விருத்தியினை மேம்படுத்தல்

### 13.1. உள்ளூர் பயிற்சி

தெரிவுசெய்யப்பட்ட சில துறைகளில் நிதி ஆணைக்குழுவின் அலுவலர்கள் பயிற்சியினைப் பெற்றனர்

- பயனுறுதியுள்ள நிர்வாகத் தேர்ச்சி (Effective Managerial Skills)
- திட்ட முன்மொழிவும் உருவாக்கமும்
- டியிற்றல் அரசாங்கம் (Digital Government)
- சைபர் பாதுகாப்பும் மற்றும் ஒழுக்க சைபர் இடமும் (Cyber Security and Ethics Cyber Space)
- திட்ட முகாமைத்துவம் (Project Management)
- தட்டச்சு உருவாக்கமும் முகப்பக்க வடிவமைப்பும் (Typesetting & Desktop Publishing)
- நுலக முகாமைத்துவம் (Library Management)
- சம்பள பட்டியல் (PayRoll)
- ஏல ஆவணங்களைத் தயாரிப்பது ( Preparation of Bid documents)
- கோப்பு முகாமைத்துவம் பொது அலுவலக நிர்வாகமும் ( File Management & General Office Administration)
- மைக்ரோ சொவ்ற் எக்சல் - மேம்பாட்டு பகுப்பாய்வு கருவிகள் ( Microsoft Excel - Advence Analysis Tools)
- ஒருங்கிணைந்த திறைசேரி முகாமைத்துவ தகவல் அமைப்பு (Integrated Treasury Management Information System (ITMIS)

### 13.2. வெளிநாட்டு பயிற்சி

நிதி ஆணைக்குழுவின் நான்கு அலுவலர்கள் குறுகிய கால வெளிநாட்டுப் பயிற்சியினைப் கரிபியன் மற்றும் தென் பசுபிக் நாடுகளினது பொது நிதி முகாமைத்துவம், பெல்ற் மற்றும் சாலை நாடுகளுக்கானமக்கள் வாழ்வாதார காப்பீடு சீனாவில் பெற்றனர் (2-3 வாரங்கள்)

### 13.3. விருந்தினர் விரிவுரை

- திரு. சுனிச்றோ ஹொண்டா (Mr.Shunichiro Honda) ஜய்க்கா ஆலோசகர்(Advisor, JICA) அவர்களினால் ''ஜப்பானிய உள்ளுராட்சி அரசாங்க முறைமை'' மற்றும் உள்ளுராட்சி அரசாங்க நிதியிடல் முறைமைக்கண்ணோட்டம்

- லோவா பல்கலைக்கழக இணைப்பேராசிரியர் மற்றும் விலை உறுதிப்பாட்டுக்கான உதவி.ஆளுனர், இலங்கை மத்திய வங்கி கலாநிதி.எச்.என்.தெனுவர அவர்கள் பொதுவான பொருளாதார கொள்கை மற்றும் பொது நிதி பற்றிய ஒரு விளக்கத்தினை பற்றிய முன்வைப்பினை வழங்கினார்

- இதில் முக்கிய விடயங்களாக கொள்கைத்தேவைப்பாடு மற்றும் கொள்கைப்படிமுறைகள் வடிவமைப்பு மற்றும் அமுலாக்கல் கொள்கை ஒப்புதல் மற்றும் அரசாங்க செயற்பாடுகள் என்பன உள்ளடக்கப்பட்டது.

- திரு.சறத் முதுகல கொள்முதல் ஆலோசகர் (USAID) அவர்களால் பொது தனியார் பங்களிப்பு தேவைப்பாடு (PPP) மற்றும் இலங்கையின் அண்மைய தனியார் முதலீடு மற்றும் பாரம்பரிய நிதியிடல் பொது தனியார் பங்களிப்பு ஆகியவற்றின் வேறுபாடும் அடிப்படைகள் பற்றிய வேறுபாடுகள் பற்றிய முன்வைப்பினை வழங்கினார்.

- திறந்த பல்கலைக்கழக மாஸ் கொம்மினிக்கேசன் சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி.மகிம் மென்டிஸ் நிதி ஆணைக்குழுவினது நல்ல ஆட்சியை உயர்த்துதல் பற்றிய முன்வைப்பினை வழங்கினார்.

### 13.4. ஊழியரது கற்கை

நிதி ஆணைக்குழுவினது அலுவலர்கள் நியமிக்கப்பட்ட கடமைகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையிலே முன்வைப்பினை வழங்கினாகள்.

### 13.5. பிராந்திய அபிவிருத்திக்கான வருவாயினை உருவாக்குதல்

2017ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 31 ஆந் திகதி ஆசியா பவுண்டேசன் நிறைவேற்று பணிப்பாளர் திரு. சுபாகரன் அருமைத்துரை அவர்கள் பிராந்திய அபிவிருத்திக்கான வருவாயை மேம்படுத்தல் பற்றிய முன்வைப்பினை வழங்கினார்.

## 14. 33ஆவது முதலமைச்சர் மகாநாடு

33ஆவது முதலமைச்சர் மகாநாடு 2017ஆம் ஆண்டு மே மாதம் 06 ஆந் திகதி ஹபரண சினமன் விடுதியில் மாண்புமிகு ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்றது இதில் நிதி ஆணைக்குழுவினது தலைவர் செயலாளர் பங்கு பற்றினர்.

மாகாண பிரதிநிதிகள் தமது மாகாண சபை பற்றிய விடயங்களைப்பற்றி விவாதிக்கவும் மற்றும் பரிந்துரைகளை வழங்குவதற்கும் சந்தர்ப்பம் வழங்குவதே இம் மகாநாட்டின் பிரதான நோக்கம் ஆகும்.

**15. மேல் மாகாண விவசாயம் நீர்ப்பாசனம் கால்நடை துறைகள் பற்றிய விடயங்களின் கலந்துரையாடல் பற்றிய கூட்டம்**

மாகாண விவசாயம் நீர்ப்பாசன கால்நடைத் திணைக்களத் தலைவர்களுடனான கலந்துரையாடல் 2017ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 03 ஆந் திகதி ஆணைக்குழுவில் இடம் பெற்றது.

மாகாண பிரதிநிதிகள் தமது மாகாண சபை பற்றிய விடயங்களைப்பற்றி விவாதிக்கவும் மற்றும் பரிந்துரைகளை வழங்குவதற்கும் சந்தர்ப்பம் வழங்குவதே இம் மகாநாட்டின் பிரதான நோக்கம் ஆகும்.

**16. பாதீட்டு ஒதுக்கீடு,2018 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அபிவிருத்தித்திட்டம் தயாரிப்பதற்கான வழிகாட்டுதல் பற்றிய கூட்டம்**

பாதீட்டு ஒதுக்கீடு,2018 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அபிவிருத்தித்திட்டம் தயாரிப்பதற்கான வழிகாட்டுதல் பற்றிய இரண்டு விசேட கூட்டங்கள் 2017ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 20 21ஆந் திகதிகளில் நிதி ஆணைக்குழுவில் இடம் பெற்றது. அனைத்து மாகாணங்களின் பிரதம செயலாளர்கள், பிரதி பிரதம செயலாளர்கள் (திட்டமிடல்) இதில் பங்கு பற்றினர்.

**17. மாகாண திணைக்களத் தலைவர்களுடனான கூட்டம்**

விவசாயம் கால்நடை கல்வி சிறுவர் நன்நடத்தை மேலைத்தேய மருத்துவம் சுதேச மருத்துவம் நீர்ப்பாசனம் மற்றும் வீதி அபிவிருத்தி திணைக்களங்களின் மாகாண பணிப்பாளர்கள் ஆணையாளர்களுடனான கூட்டம் 2017ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 05 -08 ஆம் திகதிகளில் நிதி ஆணைக்குழுவில் இடம் பெற்றது.

2018ஆம் ஆண்டுக்கான வருடாந்த அபிவிருத்தித்திட்டம் தயாரிப்பதற்கான படிமுறைகள் பற்றி கலந்துரையாடுவதே இக் கூட்டத்தின் பிரதான நோக்கம் ஆகும்.

**18. மாகாணங்களில் ஆளணி உருவாக்கலும் வெற்றிடங்களை நிரப்புதலுக்குமான கலந்துரையாடல்**

2017 டிசம்பர் மாதம் 20 ஆம் திகதி நிதி ஆணைக்குழுவினால் ஒழுங்கு செய்யப்பட்ட முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் மற்றும் தேசிய சம்பளங்கள் மற்றும் ஆளணியும் பங்கு கொண்ட கலந்துரையாடல் இடம் பெற்றது. மாகாண சபை பரிந்துரைகள் சம்மந்தமாக ஓவ்வொரு மாகாண நிறுவனத்தினதும் பங்களிப்புடனும் ஓப்புதலுடன் கொள்கை முடிவு சிபாரிசுகள் அனுமதி எடுத்தல் இதன் பிரதான நோக்கமாகும்.

## 19. சுயாதீன ஆணைக்குழுக்களினது பங்கு பற்றிய கலந்துரையாடல்

2017 ஒக்ரோபர் 17 ஆம் திகதி மாண்புமிகு பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி. ஜயம்பதி விக்கிரமரத்ன தலைமையில் சுயாதீன ஆணைக்குழுக்கள் பங்கு பற்றிய கலந்துரையாடல் இடம் பெற்றது. இதில் சுயாதீன ஆணைக்குழுக்களினது பிரதிநிதிகள் நிதி ஆணைக்குழுவின் தலைவர் உட்பட நிதி ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இக் கலந்துரையாடலின் நோக்கம் அனைத்து பிரதிநிதிகளும் ஆணைக்குழுக்களினது பிரச்சினைகள் பற்றி விவாதிக்கவும் அரசியலமைப்புக்குழுவிற்கு அவசியமான பரிந்துரைகள் செய்யவும் ஒரு வாய்ப்பை வழங்குவதாகும்.

## 20. அரசியலமைப்பு குழுவுடனான சந்திப்பு

அரசியலமைப்பு குழுவினது தலைவர் மாண்பு மிகு. கரு ஜெயசூரிய அழைப்பின் பெயரில் ஒரு கூட்டம் நடைபெற்றது இச்சந்திப்பில் சுயாதீன ஆணைக்குழுக்களினது செயல் திறன் தகுதி வாய்ந்த அலுவலர்கள் இல்லாததனால் பின்னடைவில் உள்ளது இவ்விடயத்தில் சுயாதீன ஆணைக்குழுக்கள் சரியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற முடிவு செய்யப்பட்டு இம்முடிவிற்கு ஏற்ப நிதி ஆணைக்குழு பாராளமன்ற செயலாளர் நாயகத்திற்கு “சுயாதீன ஆணைக்குழுவிற்கான தனிப்பட்ட ஊழியர்களின் கட்டமைப்பு” பற்றிய கடிதத்தினை சமர்ப்பித்துள்ளார். புதிய ஆளணிகளின் தேவைகள் (சிறப்புத் தேர்ச்சி பெற்றோர் ஒப்பந்த அடிப்படையில்) மேற்கொள்ளப்படுகிறது.

## 21. பட்டறைகள் கருத்தரங்குகள் ஆகியவற்றில் பங்கேற்பு

நிதி ஆணைக்குழுவினது மூத்த அதிகாரிகள் இலங்கைப்பொருளாதாரம், பொது முதலீட்டுத் திட்டங்கள், நிலைபேறான அபிவிருத்தி இலக்கு, பொது தனியார் கூட்டுப் பங்கேற்பு, கல்வி மற்றும் சுகாதாரம் போன்ற பல கருத்தரங்குகளில் பங்குபற்றினார்கள்.

## 22. உள்ளகக்கணக்காய்வுக் குழு

உள்ளகக்கணக்காய்வுக் குழுவின் 03 வது கூட்டம் கணக்காய்வாளர் அதிபதி மற்றும் பணிப்பாளர், கணக்கீட்டுமுகாமைத்துவ திணைக்களம் ஆகியோரின் பங்கு பற்றலுடன் இடம்பெற்றது கூட்டத்தின் முடிவுகள் நிதி ஆணைக்குழுவின் அனைத்து அலுவலர்களுக்கும் தேவையான நடவடிக்கையினை எடுப்பதற்காக அறிவிக்கப்பட்டது. மேலதிகமாக ஒழுங்கு படுத்தப்பட்ட அம்சங்களுடன் கூடுதலான உள்ளார்ந்த கணக்காய்வுச் செயற்திறனை முன்னெடுக்க நிதி ஆணைக்குழு தீர்மானித்தது.

## 23. தேசிய மற்றும் மாகாணங்களுக்கு இடையில் உகந்த ஒருங்கிணைப்பு மூலம் அபிவிருத்தி செயன்முறைகளை முன்னேற்றுவதற்கான பட்டறையினது பின்னூட்டம்

2015 ஜீன் 15 இல் இடம் பெற்ற பட்டறையினது முடிவுகளையும் பரிந்துரைகளையும் பின்பற்றுவதற்கு ஆணைக்குழு அடையாளங்காணப்பட்ட பிரச்சினைகள் மற்றும்

பரிந்துரைகளின் அடிப்படையில் ஒரு பட்டியலை தளார் செய்துள்ளது. ஒரு செயற்திட்டத்தடன் கூடிய சரிபார்க்கும் பட்டியல் ஜனாதிபதி செயலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. இதன்படி ஜனாதிபதி செயலகம் இரண்டு கூட்டங்களை நடத்தியது. சம்மந்தப்பட்ட அமைச்சுக்களின் மூத்த அதிகாரிகள் மற்றும் தொடர்புடைய நிறுவனங்கள் கூட்டத்தில் கலந்து கொண்டனர். ஜனாதிபதியின் செயலகத்தின் வேண்டுகோளின் அடிப்படையில் நிதி ஆணைக்குழு இம் முன்னேற்றம் குறித்து ஒரு பின்னூட்டத்தினை நடத்தியது.

### 24. பொது தனியார் கூட்டுப் பங்கேற்பு (PPP)

பொது நிதித் திணைக்களமும் ஐக்கிய இராச்சிய சர்வதேச அபிவிருத்தி முகவர் (USAID) ஆணைக்குழுவும் இணைந்து ஒழுங்கு செய்த பொது தனியார் கூட்டுப் பங்கேற்பு (PPP) பற்றிய பல வேலைப்பட்டறைகளில் நிதி ஆணைக்குழு கலந்து கொண்டதுடன் USAID உடன் இணைந்து கொள்முதல் ஆணைக்குழு வழிகாட்டியினை விருத்தி செய்யவுள்ளது.

### 25. நிதி ஆணைக்குழுவினது செயலாற்றுகை அறிக்கை

நிதி ஆணைக்குழுவினது 2017 ஆம் ஆண்டின் ஒவ்வொறு காலாண்டுக்கான செயலாற்றுகை அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

### 26. ஆட்சிக் கோவை

2017 டிசம்பர் 28 அன்று நிதி ஆணைக்குழுவில் இடம் பெற்ற கூட்டத்தில் நிதி ஆணைக்குழுவினது ஆட்சிக் கோவை சேர்த்துக்கொள்ளப்பட்டது இது நிதி ஆணைக்குழுவினது வெளிப்படைத்தன்மை பொறுப்புக்கூறல் மற்றும் செயல்திறனை அதிகரிக்கும்

### 27. சிறப்புக் கற்கைகள்

நிதி ஆணைக்குழுவினது செயற்பாட்டுக்காக பல தொடர் சிறப்புக் கற்கைகள் மேற்கொள்ளப்பட்டன

- மாகாண மட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி மீதான அறிக்கை
- மாகாண சுகாதாரத் துறை செலவினம் மீதான கற்கை
- மாகாண சபைகளின் உள்ளுர் அதிகாரசபைகளின் செயற்பாடுகள் மீதான கற்கை
- மாகாண வருவாய் சேகரிப்பு முன்னேற்றம் 2006 – 2016
- மாகாணங்களுக்கிடையிலான மீண்டெழும் செலவின ஒப்பீடு -2015
- பிரதான துறைகள் மீதான ஒதுக்கீடு மற்றும் செலவினம் மீதான கற்கை – 2015
- இலங்கை அரசினது நிதியிடல் உறவுகள்
- வீதி பராமரிப்புக்கான செலவினம் மற்றும் செலவு மீளப்பெறலுக்கான முன்மொழிவு
- மாகாண நிர்வாக மாகாண சபைகளின் மற்றும் உள்ளுர் அதிகார சபைகளின் ஆளணி
- மாகாணங்களின் ஆளணி மற்றும் ஊழியர்களின் சம்பளங்களின் செலவீடு

- 2016-2017 இடையிலான மாகாண அபிவிருத்தி நிதியிடல் இடைவெளி
- மாநகர சபைகள் மீதான கற்கை
- மூலதன நிதியின் பயன்பாடு
- மாநகர சபைகள மீதான நிதி சமமின்மை மீதான கற்கை

## 28. ஊழியர்களது ஆட்சேர்ப்பு

நிதி ஆணைக்குழுவிற்கு உள்ளக கணக்காய்வாளர், பிரதம கணக்காளர் மற்றும் பணிப்பாளர்(நிர்வாகம்) நியமிக்கப்பட்டனர்

## 29. நிதி ஆணைக்குழுவினது கூட்டங்கள்/ உப குழுவினது கூட்டங்கள்/ ஊழியர்களது கூட்டங்கள்

- நிதி ஆணைக்குழுவினது கூட்டங்கள் 15 இடம் பெற்றது
- நிதி ஆணைக்குழுவின் உப குழுவானது ஒவ்வொரு நிதி ஆணைக்குழுவினது கூட்டத்தின் முன்பாகவும் வழமைபோல் கூடுகிறது
- ஊழியர்களது 05 கூட்டங்கள் இடம் பெற்றது

## 30. நிதியியல் விடயங்கள்

2017 ஆம் ஆண்டில் நிதி ஆணைக்குழுவினது மீண்டெழும் ஒதுக்கீடு ரூபா 50.1 மில்லியன் இதில் 96% மீண்டெழும் செலவினத்துக்கான பயன்பாட்டுக்கானது. தனிநபர் சம்பளங்கள் மீண்டெழும் செலவவில் குறிப்பிடக்கூடிய பங்காகும். 2017 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் திகதி முதல் புதிய சம்பள கட்டமைப்பு அமுல்படுத்தப்பட்டதனால் மேலதிக நேரக்கொடுப்பனவு மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் மற்றும் புதிய ஊழியர்களினது ஆட்சேர்ப்பு காரணமாக தனிநபர் சம்பளங்களில் அதிகரிப்பு ஏற்பட்டமையே மீண்டெழும் செலவினது பிரதான அதிகரிப்பினைக்காட்டியது.

2017 ஆம் ஆண்டில் நிதி ஆணைக்குழுவினது மூலதன செலவிற்கான ஒதுக்கீடு ரூபா102.9 மில்லியன். இதில் ரூபா 100 மில்லியன் ராஜகிரியவில் புதிய அலுவலக கட்டட நிர்மானத்திற்கானது. 85% மூலதன செலவினத்துக்கான பயன்பாட்டுக்கானது. 2016 ஆம் ஆண்டில் மொத்த மூலதன ஒதுக்கீடு ரூபா 203 மில்லியன் இதில் ரூபா 200 மில்லியன் புதிய அலுவலக கட்டடத்துக்கானது கட்டுமானத்தின் தாமதம் காரணமாக பயன்பாட்டு வீதம் 46% ஆகும்.

### 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுக்கான பாதீட்டு ஒதுக்கீடும் உண்மையான செலவினமும்

| வாக்குத்தலைப்பு | கொடுப்பனவு வகை | 2017 (ரூபா. 000) | | 2016 (ரூபா. 000) | | நடைமுறையிலுள்ள ஒதுக்கீட்டு மீதி 2017 (ரூபா. 000) | செலவினம் % 2017 |
|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பீடு | உண்மை | மதிப்பீடு | உண்மை | | |
| | **மீண்டெழும் செலவினம்** | **50,160** | **48,278** | **44,694** | **43,682** | **1,882** | **96%** |
| | **தனிநபர் சம்பளங்கள்** | **31,239** | **30,107** | **26,617** | **26,338** | **1,132** | **96%** |
| 1001 | சம்பளங்கள் மற்றும் ஊழியங்கள் | 16,935 | 16,082 | 12,500 | 12,276 | 853 | 95% |
| 1002 | மேலதிக மற்றும் விடுமுறைக்கொடுப்பனவுகள் | 400 | 377 | 365 | 328 | 23 | 94% |
| 1003 | ஏனைய கொடுப்பனவுகள் | 13,904 | 13,648 | 13,752 | 13,733 | 256 | 98% |
| | **பிரயாணப்படிகள்** | **248** | **231** | **160** | **124** | **17** | **93%** |
| 1101 | உள்ளூர் பயணம் (உள்நாடு) | 168 | 159 | 100 | 72 | 9 | 95% |
| 1102 | வெளியுர் பயணம் | 80 | 72 | 60 | 53 | 8 | 90% |
| | **வழங்கல்** | **2,447** | **2,380** | **1,790** | **1,643** | **67** | **97%** |
| 1201 | காகிதாதிகள் மற்றும் அலுவலக தேவைப்பாடுகள் | 685 | 677 | 550 | 425 | 8 | 99% |
| 1202 | எரிபொருள் | 1,330 | 1,283 | 1,100 | 1,099 | 47 | 97% |
| 1203 | உணவு மற்றும் சீருடை | 25 | 24 | 40 | 32 | 1 | 96% |
| 1205 | ஏனைய வழங்கல்கள் | 407 | 395 | 100 | 86 | 12 | 97% |
| **வாக்குத்தலைப்பு** | **கொடுப்பனவு வகை** | **2017 (Rs. 000)** | | **2016 (Rs. 000)** | | **நடைமுறையிலுள்ள ஒதுக்கீட்டு மீதி 2017** | **செலவினம் % 2017** |
| | | **மதிப்பீடு** | **உண்மை** | **மதிப்பீடு** | **உண்மை** | | |
| | **பராமரிப்பு** | **2,116** | **2,116** | **2,650** | **2,565** | **0** | **100%** |
| 1301 | வாகன பராமரிப்பு | 1,400 | 1,400 | 2,000 | 1,928 | 0 | 100% |
| 1302 | பொறி மற்றும் இயந்திர பராமரிப்பு | 711 | 711 | 631 | 630 | 0 | 100% |
| 1303 | கட்டடங்கள் மற்றும் கட்டட பராமரிப்பு | 5 | 5 | 19 | 8 | - | 100% |
| | **சேவைகள்** | **13,310** | **12,689** | **12,742** | **12,295** | **621** | **95%** |
| 1401 | போக்குவரத்து (சேவைகள்) | 2,700 | 2,317 | 722 | 681 | 383 | 86% |
| 1402 | தபால் மற்றும் தொடர்பாடல் (சேவைகள்) | 1,205 | 1,195 | 1,240 | 1,226 | 10 | 99% |
| 1403 | நீர் மற்றும் மின்சாரம் (சேவைகள்) | 1,725 | 1,567 | 1,800 | 1,704 | 158 | 91% |
| 1404 | வாடகை மற்றும் உள்ளுர் வரி (சேவைகள்) | 5,280 | 5,280 | 5,280 | 5,280 | - | 100% |
| 1409 | ஏனைய (சேவைகள்) | 2,400 | 2,331 | 3,700 | 3,405 | 69 | 97% |
| | **மாற்றல்கள்** | **800** | **756** | **735** | **717** | **44** | **95%** |
| 1506 | **கடனுக்கான வட்டி** | 800 | 756 | 735 | 717 | 44 | 95% |
| | **மூலதன செலவினம்** | **102,900** | **87,838** | **203,000** | **70,552** | **15,062** | **85%** |
| | **மூலதன சொத்துக்களின் மேம்பாடும் புனருத்தாரணமும்** | **800** | **701** | **800** | **-** | **99** | **88%** |
| 2002 | பொறிகள் இயந்திரங்களின் மேம்பாடும் புனருத்தாரணமும் | 300 | 205 | 300 | - | 95 | 68% |
| 2003 | வாகனங்கள் | 500 | 497 | 500 | - | 3 | 99% |
| | **மூலதனச்சொத்துக்களின் பயன்பாடு** | **1,200** | **1,145** | **1,200** | **1,100** | **55** | **95%** |
| 2102 | தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 330 | 312 | 360 | 265 | 18 | 95% |
| 2103 | பொறிகள் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 870 | 833 | 840 | 835 | 37 | 96% |
| | **இயலளவு விருத்தி** | **900** | **863** | **1,000** | **896** | **37** | **96%** |
| 2401 | ஊழியர்களது பயிற்சி | 900 | 863 | 1,000 | 896 | 37 | 96% |
| | **கட்டடங்கள் மற்றும் கட்டடஅமைப்பு** | **100,000** | **85,129** | **200,000** | **68,556** | **14,871** | **85%** |
| 2104 | கட்டடங்கள் மற்றும் கட்டடஅமைப்பு | 100,000 | 85,129 | 200,000 | 68,556 | 14,871 | 85% |

**அரச ஊழியர்களின் முற்பணக்கணக்கு விபரங்கள்**

கீழே காட்டப்பட்ட எல்லையினுள் நிதி ஆணைக்குழு செயற்பட முடிந்தது

| விபரம் | அங்கீகரிக்கப்பட்ட எல்லை | உண்மையான எல்லை |
|---|---:|---:|
| அதி கூடிய பட்ச செலவு எல்லை | 3,200,000.00 | 3,186,426.00 |
| அதி குறைந்த பட்ச வரவு எல்லை | 800,000.00 | 1,662,272.65 |
| அதி கூடிய பட்ச இருப்பு மீதி | 12,000,000.00 | 7,910,182.85 |